## துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டம் - 2017

துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

உயர்கல்வி மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு மற்றும் அபிவிருத்தி அதிகாரசபை என்பன மீளாய்வாண்டில் செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுலாக்கல் முகவராகவும் செயற்படுகின்றது. கிடைக்கப் பெற்ற தகவலின் பிரகாரம் பொருளாதார செயற்பாடுகளின் மீது நேர்மறை தாக்கமொன்றினை ஏற்படுத்தல் மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பினூடாக கொழும்பு நகரத்தில் போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குதல், கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா பன்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு பயணஞ் செய்யும் நேரத்தினை குறைத்தல் மற்றும் துறைமுகத்திலிருந்து கொழும்பின் ஏனைய பிராந்தியங்களுக்கு சரக்கு போக்குவரத்தின் போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். நெடுஞ்சாலையில் உள்ள கொள்கலன்களின் இயக்கத்தை குறைப்பதன் ஊடாக கொழும்பில் புறநகர்களில் உள்ள போக்குவரத்து நெரிசலை எளிதாக்க கூட எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 36.50 மில்லியன் தொகையாகும். 2016 சனவரியில் செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை ஆரம்பித்திருந்ததுடன் செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்கான அமைச்சரவையின் அங்கீகாரம் 2016 மார்ச் இல் பெறப்பட்டது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2020 மார்ச் அளவில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது.

### 1.3 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும்

கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் செயற்திட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

எ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் வழங்கப்பட்டதோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

துறைமுக நுழைவினை மேன்மையுறச் செய்த நெடுஞ்சாலை செயற்திட்டம் மற்றும் புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான உயரத்திய நெடுஞ்சாலை செயற்திட்டம் ஆகியவற்றின் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவின் அலுவலகம் ஒரே வளாகத்தில் நிறுவப்பட்டிருந்த போதிலும், மேந்தலை கிரயங்களை தனித்தனியாக அடையாளம் கண்டுகொள்ள எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்கூறிய செயற்திட்டங்களுக்கு ஒரே நடைமுறைக்கணக்கே பராமரிக்கப்பட்டிருந்தது.

**3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிப் பயன்பாடு**

2016 மார்ச் 10 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் வரிசை அமைச்சின் 2017 இற்கான பாதீட்டு மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 200 மில்லியனிற்கு பதிலாக எந்த நிதி ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் ஆசிய அபிவிருத்தி வங்கியுடனான கடன் உடன்படிக்கையினை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் 2018 ஒக்டோபரில் செய்யப்பட்டிருந்தன. மேலும், ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் ரூபா 154.70 மில்லியன் வரிசை அமைச்சின் ஏனைய நோக்கத்திற்காக மாற்றப்பட்டதுடன் ஒதுக்கீட்டில் 12 சதவீதத்தினை பிரதிநிதிப்படுத்தும் ரூபா 24.43 மில்லியன் மாத்திரமே மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.2 பௌதீக செயல்முன்னேற்றம்**

பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்குள் ஒதுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் அடயப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்காக மாதாந்த, காலாண்டு, வருடாந்த நிலையான பொறுப்புடனான நிதி மற்றும் பௌதிக இலக்கினை பிரதிநிதிப்படுத்தும் ஒன்றினைந்த விபரமான செயல்நடவடிக்கைத் திட்டம் செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. கிடைக்கப் பெற்ற தகவலின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நில அளவீடுகள், சாத்திய வள ஆய்வின் கீழான வேலைகள் மாத்திரமே செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 பெப்ரவரியில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மேலும் பிரதான கொள்முதல் திட்டத்தின்படி கட்டுமான கண்காணிப்பிற்கான ஆலோசனை சேவைகள் மற்றும் சிவில் வேலைகளிற்கான பிரதான கொள்வனவு நடவடிக்கைகள் 2018 மே 31 இல் உள்ளவாறு கூட பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

செயற்திட்டமானது இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் பயன்பாட்டிற்காக செயற்திட்டத்தினால் நிர்மானிக்க எதிர்பார்க்கப்பட்ட 17 புதிய சரக்கு சேமிப்பு காரியாலய கட்டிடங்கள் மற்றும் 04 பட்டறைகளை வடிவமைப்பதற்காக செயற்திட்டமானது மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திடமிருந்து ஆலோசனை சேவைகள் பெறப்பட்டிருந்ததுடன் அதற்கான அதிகாரம் 2017 ஒகஸ்ட் 23 இல் இடம்பெற்ற கூட்டத்தில்

அமைச்சரவையினால் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், அதற்கான முறையான உடன்படிக்கை 2018 ஜீன் 30 இல் உள்ளவாறு கூட ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவிகளின் பிரகாரம், 21 பதவி நிலைகளுக்கான செயற்திட்ட கண்கானிப்பு பிரிவின் ஊழியர்களை கொண்டிருந்தது. அதில் முக்கிய பதவிகளான பிரதம பொறியியலாளர், ஒரு செயற்திட்ட பொறியியலாளர், ஒரு கொள்வனவு நிபுனர் மற்றும் ஒரு மீள்வழங்கள் உத்தியோகத்தர் ஆகியன 2017 திசெம்பர் 31 வரை நிரப்பப்படாது இருந்தது. மேலும், தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்ட செயற்திட்ட பணிப்பாளர் 2017 செப்தெம்பர் 07 இல் ராஜினாமா செய்திருந்ததுடன் உரிய பதவியானது 2018 ஜனவரி 11 வரை காலியாக இருந்தது.